**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி-2010**

---

## 1 நிதிசார்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப்பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படக்கூடிய தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு அமைய வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் மூலதனச் செலவினத்திற்கான அரசாங்க மானியங்கள் தொடர்பான அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது காணிச் சுவீகரிப்புக்கான இழிப்பீட்டுக் கொடுப்பனவு தாமதங்களில் செலுத்தப்பட்ட ரூபா 7,382,051 மொத்தமான வட்டி ஐந்தொகையில் காணிகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 13,562,314 மொத்தமான பின்வரும் செலவினங்கள் செயற்திட்டங்கள் தொடர்பான செலவினங்களிற்கு கவனம் செலுத்தாமல் நிலையான சொத்துக் கணக்குகளிற்கு அபிவிருத்தி செயற்திட்ட செலவினக் கணக்குகளில் கொண்டுவரப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்டது. ஆதலால், ஒவ்வொரு நிலையான சொத்துக் கணக்கிலும் வெளிப்படுத்தப்பட்ட

பெறுமதியின் உண்மைத் தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்தியடைய முடியாத்திருந்தது.

| **நிலையான சொத்து** | **செலவினத் தன்மை** | **தொகை** |
|---|---|---|
| | | ரூபா |
| காணிகள் | றொட்றிகோவத்தைக்கு மின்னிணைப்பு பெறல் | 119,970 |
| | கழிவு நீர் அகற்றல் முறைமை | 8,236,915 |
| கட்டிடங்கள் | வேலைகளிற்காகப் பயன்படுத்தாத நிதிகள் | 2,561,145 |
| | நாளாந்த வேலைக்காக புல்டோசர்களை வாடகைக்கமர்த்தல் | 146,988 |
| | பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத சாரதிகளின் சம்பளங்கள் | 122,338 |
| | ட்றக்குகள் மற்றும் மின்பிறப்பாக்கிகளை வாடகைக்கமர்த்தல் | 293,976 |
| | பாறைகளைப் பரிசோதித்தல் | 1,041,232 |
| | காணி பதப்படுத்தல் | 1,039,750 |
| | | 13,562,314 |

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | விபரங்கள் |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அரசாங்க மானியங்களில் ரூபா 108,000,000 ஆன தொகை நிதிக்கு பொறுப்பான அமைச்சரின் ஒத்திசைவைப் பெறாமல் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 இன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டிகளின் 2.9 ஆம் பிரிவு | கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகி அமைச்சரவையால் நியமிக்கபப்பட்ட ஒப்பந்தகாரருக்கு மாத்தளை விமான நிலைய நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் வழங்குவதில் அங்கீகாரம் இருந்தபோதிலும் விலை உடன்பாட்டுக் கலந்துரையாடலில் பங்குபற்றிய 25 உத்தியோகத்தர்களிற்கு கொள்வனவுக் குழுப் படியாக ரூபா 237,500 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்குகளிலுள்ள பின்வரும் விடயங்களை அவை ஒவ்வொன்றிற்கும் எதிராக சுட்டிக் காட்டப்பட்ட சான்றுகள் இல்லாமையால் அவற்றை கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யமுடியாதிருந்தது.

| | விபரங்கள் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
| --- | --- | --- | --- |
| | | ரூபா | |
| (அ) | ‘‘சூரிய மங்கள’’ மீதான செலவினம் | 500,000 | பிரச்சாரம் செய்யப்பட்ட திகதிகள், நிகழ்ச்சித்திட்ட விபரங்கள், செலவின விபரங்கள், இறுவெட்டுக்கள் போன்றன. |
| (ஆ) | அந்தாரவேவா முதல் பகல மாத்தளை வரையான வீதி நிர்மாணம் | 28,800,000 | நிர்மாண ஒப்பந்தம் மற்றும் செய்யப்பட்ட வேலைச் சான்றிதழ்கள் தொடர்பான கோவைகள், |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விமானப் பயணச் செலவுகள் | 308,635 | வெளிநாட்டு சுற்றுலாப் பயணத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படவேண்டுமென வேண்டப்பட்டவாறான துபாய் விமான நிலைய தீர்வையற்ற வரிச் சந்தைக் கட்டிடத் தொகுதியின் விசேட கற்கையிலான அறிக்கை |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகளிற்கான அரசாங்க மானியங்கள் தொடர்பான கம்பனியின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 1,037,743 ஆன தேறிய பற்றாக்குறைக்கெதிராக முன்னைய ஆண்டில் ரூபா 7,194,308 ஆன தேறிய மிகை விளைந்திருந்தமை நிதிசார் விளைவுகளில் ரூபா 8,232,051 ஆன வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

### 2.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் நிர்மாணங்கள் மற்றும் பொருத்துதல்கள் அளவீட்டுப் பட்டியலின்படி, குறித்துரைக்கப்பட்டவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்காத போதிலும் 2006 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தகாரருக்கு இறுதிக் கொடுப்பனவு மற்றும் பிடிகாசு என்பன முழுமையாகச் செலுத்தப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் பொறியியலாளருடைய செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை 2007 யூலை மாதத்திலேயே வழங்கப்பட்டிருந்தது.

| செயற்திட்டத்தின் பெயர் | ஒப்பந்த பெறுமதி | | சான்றுபடுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|
| | வெளிநாடு | உள்ளூர் | வெளிநாடு | உள்ளூர் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பயணிகள் இறங்குதுறை கட்டிடம் பீ- 1 | 5,042,624,067 | 1,968,670,442 | 5,042,624,067 | 1,968,670,442 |
| சிவில் மற்றும் பயன்பாட்டு வேலைகள் ஏ | 1,176,308,721 | 567,374,104 | 1,176,308,721 | 567,374,104 |

மேற்குறித்த ஒப்பந்தம் தொடர்பில் சகல கொடுப்பனவுகள் மற்றும் பிடிகாசு விடுவிக்கப்பட்டிருப்பினும், ஒப்பந்தகாரரின் இடைக்கால கொடுப்னவுச் சான்றிதழ் அடிப்படையில் பின்வரும் சுங்கத் தீர்வைகள் மற்றும் உழைக்கும் போதே செலுத்தும் வரி என்பன தொடர்பில் மீளாய்வாண்டின் போதும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.

| செயற்திட்டத்தின் பெயர் | இடைக்கால கொடுப்னவுச் சான்றிதழ் | கோரப்பட்ட தொகை | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| சிவில் மற்றும் பயன்பாட்டு வேலைகள் ஏ | ஏ-36 | 7,131,649 | 7,131,649 |
| பயணிகள் இறங்குதுறை | பீ-1-37 | 67,454,268 | 67,454,268 |
| கட்டிடம் பீ- 1 | பீ-1-38 | 64,074,866 | 23,414,083 (முற்பணமாக) |
| | | | 98,000,000 |

ஆகவே, ஒப்பந்தம் பூர்தியானதிலிருந்து 4 ஆண்டுகள் கடந்த பின்னரும் 2007 இல் வழங்கப்பட்ட இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழிற்காக மீளாய்வாண்டில் செய்யப்படுகின்ற கொடுப்பனவுகளிற்கான காரணங்கள் கிடைக்காமை காரணமாக கணக்காய்வில் கொடுப்பனவின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முயாதிருந்தது.

## 2.3. சொத்துக்கள் முகாமைத்துவம்

விமான நிலைய அபிவிருத்திகளிலான விசேட செயற்திட்டங்களிற்காக திறைசேரி மூலம் கிடைத்த நிதிகள் ஒரு ஆண்டிற்கு மேலாக கம்பனியின் இரண்டு வங்கிக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கணக்குகளிலுள்ள அத்தகைய பின்வரும் காசு மீதிகள் பயன்படுத்தப்படாத சொத்துக்களாக அவதானிக்கப்பட்டது.

| நடைமுறைக் கணக்கு | மீதி |
|---|---|
| | ரூபா |
| ஏ | 19,526,750 |
| பீ | 3,037,318 |

## 2.4. போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாத்தளை சர்வதேச விமான நிலைய நிர்மாணச் செயற்திட்டம் தொடர்பாக கவனிப்பாளரால் பங்குபற்றிய உத்தியோகத்தரிற்காக குறித்தொதுக்கிய படி அல்லது பிரயாண மீளளிப்பு மீதான எல்லைகள், சீவனப்படி மற்றும் ஹோட்டல் பற்றுச்சீட்டுக்கள் என்பன அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிற்கான சீவனப் படிகளாக பிரயாண மீளளிப்பு, சீவனப்படிகள் மற்றும் ஹோட்டல் பற்றுச்சீட்டுக்கள் என்பவற்றில் திறைசேரி நிதிகளிலிருந்து ரூபா 9,235,012 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது.

| **ஆண்டு** | **உதவிப் படிகளின் மீளளிப்பு** |
|---|---|
| | ரூபா |
| 2008 | 1,542,016 |
| 2009 | 3,700,514 |
| 2010 | 3,992,482 |
| | 9,235,012 |

(ஆ) செயற்திட்ட செற்பாட்டுப் பிரிவு தாபிக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 24,244 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மாத்தளையில் இரண்டாவது சர்வதேச விமான நிலைய நிர்மாணிப்புக்கான செயற்திட்டத்தின் செயற்பாடு மற்றும் மேறபார்வை நடவடிக்கைகளிற்காகவும் செய்யப்பட்ட வேலை சான்றுபடுத்துவதற்காக பொறுப்பு ஒதுக்கப்பட்ட பொருத்தமான பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 காணி சுவிகரித்தல்

கம்பனியின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கான காணிகளைச் சுவிகரிப்பதற்காக 1997 முதல் 2008 வரையான காலத்தின் போது பல்வேறு பிரதேச செயலாளர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 33,813,795 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் கூட முற்பணங்கள் மற்றும் வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

| **கொடுப்பனவுத் திகதி** | **பிரதேச செயலகம்** | **தொகை** |
|---|---|---|
| | | ரூபா |
| 1997 திசெம்பர் 31 | கட்டான | 2,083,648 |
| 1998 திசெம்பர் 16 | கம்பஹா | 4,718,000 |
| 2000 யூலை 18 | கல்கிசை | 834,118 |
| 2008 பெப்ரவரி 12 | கல்கிசை | 24,178,029 |
| 2008 பெப்ரவரி 22 | கட்டான | 2,000,000 |
| | | 33,813,795 |

காணிகளின் சுவிகரிப்பு மற்றும் முற்பணங்கள் தீர்ப்பதில் உள்ள தாமதங்கள் என்பனபற்றி முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையிலும் குறிப்படப்பட்ட போதிலும்கூட பிரதச செயலாளர்களால் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மீதான முன்னேற்றம் மற்றும் முற்பணங்களின் தீர்ப்பனவு மற்றும் காணி சுவீகரிப்பு மீதான கண்காணிப்பு என்பவற்றை கோருவதற்கு மீளாய்வாண்டின் போதும்கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) காணிச் சுவிகரிப்பு
(ஆ) ஒப்பந்த நிருவாகம்
(இ) சுங்கத் தீர்வைகள் மற்றும் வரிகளின் மீளளிப்பு